[1973 நவம்பர் 19]

3 ஆரம்ப தேக்கங்கள், அதற்குப் பின்னர் மூன்று இரண்டாவது கட்ட தேக்கங்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கு கழிவு நீரின் தரம் மாற்றப்படும். பிறகு இரண்டு திறந்த வெளி தேக்கங்கள் அமைத்து அதற்குப் பின்னர் நீரேற்றுக் கருவிகளை அமைத்து மற்ற தண்ணீரை கலக்குகிறபொழுது, கழிவு நீரின் அசுத்தத்தின் விகிதாசாரத்தைக் குறைத்து அதன்மூலம் கெடுதல் தவிர்க்கப்படுவதற்கு வழி செய்யப்பட்டு வருகிறது.

Sub-Registry Office for Tiruvalangadu.

* 163 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Registry Office at Tiruvalangadu in Tiruttani taluk ; and

(*b*) if so, when it will be opened ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, திருத்தணி வட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 ஊராட்சி ஒன்றியங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. திருவாலங்காட்டில் மட்டுமில்லை. ஆகவே, அங்கு ஒரு அலுவலகம் உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட அதற்கு 1,500 பதிவுகள் இருக்கவேண்டும். ஆனால், திருவாலங்காட்டில், 1,284 பதிவுகள்தான் பதிவு செய்யும் நிலையிலிருக்கிறது. எனவே, முதலில் குறிப்பிட்ட நிலையை அடையும்போது அரசு இதனைப் பரிசிலனை செய்யும்.

Buildings for Government Offices in Madras.

* 164 *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct buildings to house the Government Offices in the City of Madras now functioning in rented buildings ; and

(*b*) the amount of monthly rent paid for these offices at present ?